செ.வெ.எண்:48/அக்டோபர்/ 2019 நாள்: 17.10.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்தவர்கள் மற்றும் சிறப்பாக செயல்படும் நிறுவனங்களுக்கு தமிழ அரசு விருதுகள் வழங்கப்படவுள்ளது. தகுதியானவர்கள் வருகின்ற (3.12.2019) க்குள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

------------

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்தவர்கள் மற்றும் சிறப்பாக செயல்படும் நிறுவனங்களுக்கு கீழ்க்காணும் தமிழக அரசின் மாநில விருதுகள் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினமான 03.12.2019 அன்று சென்னையில் விருது வழங்கப்படுகிறது. இவ்விருதுகள் சிறந்த பணியாளர் / சுயதொழில் புரியும் 1. கை, கால் பாதிக்கப்பட்டோர் 2. பார்வை திறன் பாதிக்கப்பட்டோர் 3. செவித்திறன் பாதிக்கப்பட்டோர் 4. அறிவுசார்குறைபாடுடையோர் மற்றும் 5. தொழுநோயால் குணமடைந்தோருக்கும் 6. பார்வையற்றோருக்கு கற்பிக்கும் சிறப்பு ஆசிரியர் 7. செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கு கற்பிக்கும் சிறப்பு ஆசிரியர் 8. அறிவுசார்குறைபாடுடையோருக்கு கற்பிக்கும் சிறப்பு ஆசிரியர் 9. சிறந்த சமூகப் பணியாளர் 10. மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம் 11. ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணியாற்றும் செவிதிறன் குறையுடைய 12. ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணியாற்றும் அறிவுசார்குறைபாடுடையோருக்கான சிறந்த ஆசிரியர் 13. மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஒட்டுநர் 14. மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய நடத்துநர் (தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்) 15. பேச்சு மற்றும் மொழிதிறன் குறைபாடு 16.புறஉலகு சிந்தனையற்றோர் மற்றும் குறிப்பிட்ட கற்றல் இயலாமை 17. மனநலம் பாதிக்கப்பட்டோர் 18. இரத்த உறையாமை அல்லது இரத்த ஒழுகு குறைபாடு, அரிவாளனு இரத்த சோகை 19. நாட்பட்ட நரம்பியல் பாதிப்பு, திசு பன்முக கடினமாதல் மற்றும் நடுக்குவாதம், 20. பல்வகை ஊனம் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளது. அவ்விருதுகளை பெற திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை சார்ந்த தகுதியுடைய விண்ணப்பத்தாரர்கள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், மாவட்ட நீதிமன்ற வளாக பின்புறம், சார்நிலைக்கருவூலம் அருகில், கண்டோன்மெண்ட், திருச்சிராப்பள்ளி அவர்களிடமிருந்து நேரிலோ அல்லது தொலைபேசி எண் 0431-2412590 பெற்று 21.10.2019க்குள் விண்ணப்பித்தினை பூர்த்தி செய்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரிடம் விண்ணப்பிக்குமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிவராசு, இ.ஆ.ப தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:**

17/10/2019

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**